# அரச ஊடகம் மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரின் நியமனம் ஆகியன சம்பந்தமான சர்ச்சை

***14 ஜனவரி 2010, கொழும்பு, இலங்கை:*** பொறுப்பானதும், வாழ்க்கைத் தொழிலிலானதுமான இதழியலின் ஏதாவது கருத்துக்கு இன்றியமையாத சமநிலையினதும், பாரபட்சமின்மையினதும் தத்துவங்களை முழுமையாக உதாசீனம் செய்தபடியும் (அரசாங்கத்திற்குச் சொந்தமானதும், வரி-செலுத்துபவர் நிதிப்படுத்தலிலானதுமான ஊடக நிறுவனங்களைப் பொறுத்தளவில் பாரிய அழுத்தத்தைக் கூட பிரயோகிக்கின்ற), அரசியலமைப்பின் உறுப்புரை 104B (5)(a) இனால் தேர்தல் ஆணையாளரில் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் அவரினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை மீறுகின்றதன்மையொன்றிலும் அரச-கட்டுப்பாட்டிலான ஊடகங்கள் செயற்படுகின்ற சூழ்நிலையொன்று எழுந்துள்ளதாக தற்போது மிக அதிகளவில் தெளிவாகவுள்ளது. எனவே, உறுப்புரை 104B (5)(a)இன் பிரகாரம், விசேடமாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினதும் தலைவர்கள் அரசியலமைப்பினால் சுமத்தப்பட்டுள்ள சட்ட கடமையொன்றின் மீறலில் உள்ளனர்.

இது தொடர்பில், தேர்தல் ஆணையாளர் முதலில் அடையாளம் கண்டு, பின்னர் தகுதிவாய்ந்த அதிகாரியாக திரு.ஜயம்பதி ஹெட்டிஆரச்சியை (முன்னாள் இலங்கை நிருவாகச் சேவை) அரசியலைப்பின் உறுப்புரை 104B (5)(C)இன் பிரகாரமும், 2002இன் 3ஆம் இலக்க தகுதிவாய்ந்த அதிகாரி (அதிகாரங்களும், பணிகளும்) சட்டம் இல.3இன் பிரகாரமும் நியமித்தார் என்பதையிட்டு CMEV மகிழ்ச்சியடைகின்றது. தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்களை மீறியதன் காரணமாக உண்மையிலேயே சில நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டதையும் CMEV கவனத்திற்கெடுக்கின்றது.

எனினும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அபேட்சகர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் (CMEVஇன் பிரதிநிதிகள் உட்பட) ஆகியோர் ஜனவரி 12 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற கூட்டமொன்றில், தகுதிவாய்ந்த அதிகாரிக்கு சம்பந்தப்பட்ட அரச ஊடக நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பின்மையையிட்டு தேர்தல் ஆணையாளர் தனது மனக்குழப்பத்தை வெளிப்படுத்தியதுடன், தகுதிவாய்ந்த அதிகாரியாக திரு.ஜயம்பதி ஹெட்டிஆரச்சியின் நியமனத்தை மீளப்பெறுவதையிட்டு தாம் கருதுகின்றதாக சுட்டிச்சொல்கின்ற அளவுக்குச் சென்றிருந்தார்.

தகுதிவாய்ந்த அதிகாரியின் நியமனத்தை நீக்கும் கண்மூடித்தனமான விருப்பினை மீள்கரிசனைக்கு எடுக்குமாறு தேர்தல் ஆணையாளரை வலியுறுத்தி, ஜனவரி 14 அன்று அவருக்கு கடிதமொன்றை CMEV விலாசமிட்டிருந்தது. எனவே, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினதும் நடத்தையில் நேர்மையின் வெளித்தோற்றத்தையாவது உறுதிப்படுத்துவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரியின் நியமனத்திற்கும், அதிகாரங்களை நிறைவேற்றுவதற்குமான ஏற்பாடு பதினேழாவது திருத்தத்தினால் வழங்கப்பட்ட சில குறிப்பிடத்தக்க பொறிமுறைகளில் ஒன்றாகும்.

இணக்கமற்ற நிலை இருந்த போதிலும், பொறிமுறையைச் செல்லாததாக்குவதில், அது சட்டபூர்வரீதியில் நியாயமற்றதாக மட்டும் விளங்கும் என்று இல்லாமல் ஆனால், சட்டத்தினதும், அரசியலமைப்பினதும் மீறல் சம்பந்தமாக விலக்கீட்டுரிமையை ஊக்குவிக்கும் விரும்பத்தகாத தாக்கத்தையும் கொண்டிருக்கும்.

எனினும், பெரிதுமே பொதுவாக, ஒன்றில் தேர்தல் ஆணையாளரின் பதவி அல்லது பதினேழாவது திருத்தத்தினால் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் ஆகியன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கட்சி சார்பான அனுகூலத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்க நிறுவனங்களைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதில் ஆவலைக் கொண்டவர்களால் மதிப்பற்றதாக்குவதில் முயற்சிகளைத் தடுப்பதில் ஆற்றலைக் கொண்டுள்ளன என்ற பொதுமக்களின் மனவுணர்வு பற்றி CMEV கரிசனை கொண்டுள்ளது. பொதுமக்கள் அக்கறையில் பொருத்தமான சட்ட நடவடிக்கை உட்பட சுதந்திரமானதும், நியாயமானதுமான ஜனாதிபதி தேர்தலொன்றை உறுதிப்படுத்துவதற்காக பதினேழாவது திருத்தத்தின் கீழ் தனது அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு சிவில் சமூகத்திலிருந்து அவருக்கு தேவைப்படுகின்ற ஏதாவது ஆதரவை வழங்குவது அது தொடர்ந்துமே அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளதாக அதன் கடிதத்தில் தேர்தல்கள் ஆணையாளருக்கு CMEV உறுதிப்படுத்தியது.

தகுதிவாய்ந்த அதிகாரியின் நியமனத்தின் அச்சு ஊடக மற்றும் இணையதள அறிக்கையும், தனது பணிகளை நிறைவேற்றுவதில் அவர் எதிர்நோக்கியதாகத் தோன்றுகின்ற பிரச்சனைகளும் முரண்பாட்டிலான அறிக்கைகளினாலும், தவறான பொருள்விளக்கங்களினாலும், குற்றச்சாட்டுக்களினாலும் மற்றும் ஊடகங்கள், குறிப்பாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன தொடர்பில் தேர்தல் ஆணையாளரினதும், தகுதிவாய்ந்த அதிகாரியினதும் அதிகாரங்கள் தொடர்பிலான அரசியலமைப்பு மற்றும் சட்ட வரைச்சட்டம் ஆகியன பற்றிய பொதுவான புரிந்துணர்வின்மை ஆகியனவற்றினாலும் சித்திரிக்கப்பட்டுள்ளதாக ஆரம்பத்திலேயே நாம் கவனத்திற்கெடுத்தோம். இது பொதுமக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பநிலையை விளைவித்தது மட்டுமன்றி, ஆனால் தேர்தலை ஆளுகின்ற சட்டத்திலும், நிறுவனங்களிலும் பொதுசன நம்பிக்கையை அரிப்பதில் கையாலாகாததன்மையின் மனவுணர்வொன்றையும் உருவாக்கியுள்ளது.

தேர்தல் ஆணையாளர் கடமையின் சார்பாக தகவலை வெளிப்படுத்துவதில் அதிக திறந்த அணுகுமுறையொன்றினதும், அதிகாரபூர்வமான ஆவணப்படுத்தலினதும் இன்மையானது இந்த துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு கணிசமானளவு பங்களித்துள்ளதாக நாம் பலமாக நம்புகின்றோம். தகுதிவாய்ந்த அதிகாரியை அடையாளம் காண்பதிலும், அவரது நியமனத்திலும், தீர்மானமெடுத்தல் நடைமுறை தொடர்பிலும், அதன் பின்னர் அவரது அதிகாரங்களையும், பணிகளையும் நிறைவேற்றுவதில் அவரது நடவடிக்கைகளிலும் அதிகளவு ஒளிவுமறைவின்மை இருந்திருந்தால், தேர்தலுக்குரிய நிறுவனங்களின் நேர்மையையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதிலும், அரச ஊடகங்களின் பிரிவுகளின் ஒத்துழைக்காத நடத்தையை நிராகரிப்பதிலும் பொது மக்களின் ஆதரவு முக்கியமானது என்பதனால், அது மேலும் கிடைக்கக்கூடியதாக விளங்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொள்கின்றோம். எல்லாவற்றுக்கும் மேலாக, தேர்தல் நடைமுறையின் நேர்மைக்கும், அதைத் தொடர்ந்து இலங்கையில் ஜனநாயகத்திற்கும் மற்றும் அரசியலமைப்பிலான அரசாங்கத்திற்குமான பாரிய முக்கியத்துவத்தைக் கொண்ட இப்பிரச்சனையின் மிகவும் செம்மையானதும், முரண்படாததுமான செய்தி அறிக்கையை உறுதிப்படுத்துவதைத் திருப்தி செய்கின்றது.

### *பின்னணி*

தேர்தல்கள் ஆணையாளரின் கடமையைப் பதிலீடு செய்வதற்கு ஒரு புதிய தேர்தல் ஆணைக்குழுவின் கட்டமைப்பு, அடக்கம், நியமனத்தன்மை மற்றும் அகற்றுதல் ஆகியவற்றை மாற்றுவதன் மூலம் தேர்தல் நிருவாகப் பொறிமுறையின் சுதந்திரத்தைப் பலப்படுத்துவதை 2001இல் இயற்றப்பட்ட அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தம் நாடி நிற்கின்றது. கணிசமானளவு அதிகாரங்களையும், வினைப்படுத்தலின் பாரிய அதிகாரங்களையும் கொண்ட பரந்த நோக்கெல்லையொன்று புதிய ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அடக்கத்தைப் பொறுத்தளவில், கிரமமான நிருவாக சேவை ஆதரவுக் கட்டமைப்பொன்றுக்கு மேலதிகமாக நிபுணர்களையும், சிவில் சமூகத்தையும் உள்ளடக்குவதற்கு நியமனங்களின் துறையை பரவலாக்குவதன் ஊடாக புதிய தேர்தல் ஆணைக்குழுவின் சுதந்திரம் மேம்படுத்தப்பட்டது. தேர்தல்களின் நிருவாகத்தில் தீர்மானமெடுப்பதில் பங்காளர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதே கருத்தாகும். சுதந்திரம் தொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவுக்கான நியமனங்கள் ஒரு புதியதும், கட்சி சார்பற்றதுமான அரசியலமைப்புச் சபையினால் செய்யப்பட வேண்டும் என்றும், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஒப்பிடக்கூடிய பாதுகாப்பிலான பணிக்காலம் விளங்க வேண்டும் என பதினேழாவது திருத்தம் வழங்கியது. பொதுசன மற்றும் அரச வளங்களினதும், அரசுக்குச் சொந்தமானதும், கட்டுப்பாட்டிலானதுமான ஊடகங்களினதும் துஷ்பிரயோகத்தைத் தடுப்பது மீது தேர்தல் ஆணைக்குழுவுக்கு மேம்பாட்டிலான அதிகாரங்களை புதிய அரசியலமைப்பு வரைச்சட்டம் திட்டமாக வலியுறுத்தியுள்ளது.

எனினும், தேர்தல்களின் நிருவாகத்திற்கு இந்த அரசியலமைப்பு வரைச்சட்டம் பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் உத்தேசத்திலான தன்மையில் அது ஒருபோதுமே அமுல்படுத்தப்படவில்லை. ஆரம்பத்தில் அப்போதைய ஜனாதிபதிக்கும், அரசியலமைப்புச் சபைக்கும் இடையிலான உடன்படிக்கை இன்மையின் காரணமாக, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக பின்னவரின் நியமனத்தினாலும், அதைத் தொடர்ந்து முதலாவது உறுப்பினர்களின் தவணைகள் காலாவதியானதால் அரசியமைப்புச் சபையின் அரசியலமைப்பு இன்மையின் காரணமாகவும், தேர்தல் ஆணைக்குழுவொன்று இன்மையின் காரணமாகவும் தேர்தல் ஆணைக்குழுவொன்று ஒரு போதுமே நியமிக்கப்படவில்லை. அதிர்ஷ்டவசமாக, பதினேழாவது திருத்தச் சட்டம், பிரிவு 29(2)இல் உள்ள காப்பாற்றுதல் வாசகமொன்று, தேர்தல் ஆணைக்குழுவொன்று அரசியலமைப்பு இன்மையின் ஏதேனும் காரணத்தைப் பொறுத்து, பதினேழாவது திருத்தத்தின் ஆரம்பத்திற்கு உடனடியான முன்னர் தேர்தல்கள் ஆணையாளர் பதவியை ஏற்கின்ற நபர், ஆணைக்குழு நியமிக்கப்படும் அத்தகைய நேரம் வரை தேர்தல் ஆணைக்குழுவின் மேம்படுத்தப்பட்ட அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரத்தைக் கொண்டிருப்பதை வழங்குகின்றது. இந்த ஏற்பாட்டின் கீழேயே தேர்தல்கள் ஆணையாளர் திரு.தயானந்த திசநாயக்க, அது முதல் தேர்தல்களை நிருவகித்துள்ளார்.

## *தேர்தலொன்றின் போது ஊடகங்கள் தொடர்பில் அரசியலமைப்பு வரைச்சட்டமும், அதிகாரங்களும்*

பொதுவாக ஊடகங்கள் மீது, குறிப்பாக பிரதான அரசாங்க ஒலிபரப்பாளர்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (இ.ஒ.கூ.) மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (இ.ரூ.கூ.) ஆகியன மீது கட்டுப்பாட்டின் சில அதிகாரங்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு உறுப்புரை 104B (5) வழங்குகின்றது. பதினேழாவது திருத்தம் இ.ஒ.கூ. மற்றும் இ.ரூ.கூ. ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்குவதுடன், வேறு அரசுக்குச் சொந்தமான அல்லது கட்டுப்பாட்டிலான ஒளிபரப்பாளர்களான சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு (ஐ.ரி.என்) அத்துடன் அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஓ.ஃப் சிலோன் (எ.என்.சி.எல்.) குருப்புக்குச் சொந்தமானதும், அரசாங்கத்திற்குச் சொந்தமானதும், அரசாங்கக் கட்டுப்பாட்டிலானதுமான அச்சக ஊடகங்களை விலக்கி வைக்கின்றது.

உறுப்புரை 104B(5) (a)இன் கீழ், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றை உறுதிப்படுத்த அவசியமானது என ஆணைக்குழு கருதுகின்றவிடத்து செய்திப்பத்திரிகையொன்றின் ஏதாவது உரிமையாளர் அல்லது வெளியீட்டாளர், ஏதாவது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு இயக்குனருக்கு அத்தகைய பொருத்தமான வழிகாட்டல்களை ஏதாவது தேர்தலை அல்லது சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பில் வழங்குவதற்கு ஆணைக்குழு அதிகாரத்தைக் கொண்டுள்ள 'உப-பந்தி (அ)இன் கீழ் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள ஏதாவது வழிகாட்டல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு சகல அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு' இ.ஒ.கூ. மற்றும் இ.ரூ.கூ.இன் தலைவர்கள் மீது விசேட கடப்பாடொன்றை உறுப்புரை 104B (5) (b) இடுகின்றது.

உறுப்புரை 104B (5) (c)இன் பிரகாரம், இத்தகைய வழிகாட்டல்களை இந்த அரசாங்க ஊடக நிறுவனங்களில் ஏதேனும் ஒன்று மீறினால், '....... தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை ஆணைக்குழு நியமிக்கலாம். அவர் அத்தகைய நியமனத்தின் திகதியிலிருந்து செயற்படத்தக்கதாக, சகல அரசியல் ஒளிபரப்புக்கள் அல்லது வேறு ஏதாவது ஒலிபரப்பு தொடர்பில் (இ.ஒ.கூ. அல்லது இ.ரூ.கூ.) .... இன் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்கலாம். இது ஆணைக்குழுவின் கருத்துப்படி தேர்தல் முடியும் வரை தேர்தலை அத்துமீறுகின்றது....' காலத்தின் போது அத்தகைய முகாமைத்துவத்தை தகுதிவாய்ந்த அதிகாரி பொறுப்பேற்றால், அத்தகைய முகாமைத்துவத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட ஏதாவது பணியை இ.ஒ.கூ. அல்லது இ.ரூ.கூ. நிறைவேற்ற முடியாது.

உறுப்புரை 104 B(5)(c)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியின் அதிகாரங்கள் 2002இன் 3ஆம் இலக்க தகுதிவாய்ந்த அதிகாரி (அதிகாரங்களும், பணிகளும்) சட்டத்தில் விபரமாக விவரிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் பிரிவு 2இன் 16 உப பிரிவுகளின் (a - p) கீழ், பொதுசன அக்கறையையும், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றினதும், நிகழ்ச்சியில் உயர் தரங்களினதும் அக்கறைகளையும் பராமரிக்கும் அதேவேளை, இ.ஒ.கூ. மற்றும் இ.ரூ.கூ. ஆகியவற்றின் முறையே வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகளை மேற்பார்வை செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் தகுதிவாய்ந்த அதிகாரி அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். முகாமைத்துவம் தொடர்பில் மட்டுமன்றி, ஆனால் நிகழ்ச்சி, தயாரிப்பு, விளம்பரப்படுத்தல் மற்றும் உள்ளடக்கக் கட்டுப்பாடு ஆகியவற்றில் தமது மூலச்சட்டங்களின் கீழ் (அதாவது, 1966இன் 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1982இன் 6ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டம்) ஒதுக்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும், பணிகளையும் தகுதிவாய்ந்த அதிகாரி ஏற்றுக்கொள்கின்றார். தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு மட்டுமன்றி [பார்க்க உறுப்புரை 104B (5)(b)] ஆனால் சிறந்த பகிர்ந்துகொள்ளல், கௌரவம், சமநிலை, செம்மை, பாரபட்சமின்மை மற்றும் பொதுசன அக்கறை ஆகியன தொடர்பில் ஏற்பாட்டின் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதியாக்க நிலைமைகளுக்கு இ.ஒ.கூ. மற்றும் இ.ரூ.உ. ஆகியன இணங்குவதை உறுதிப்படுத்துவதை சட்டத்தின் பிரிவு 3 தகுதிவாய்ந்த அதிகாரியை வேண்டுகின்றது.

தேர்தல் பிரசாரங்களின் போது இலங்கையில் வழமையாக நடப்பது போல, புதிய பதினேழாவது திருத்த வரைச்சட்டத்தின் கீழ் முதலாவதாக நடைபெற்ற 2004 ஏப்ரலின் பொதுத் தேர்தலின் போது அவ்வருடத்தில் சர்ச்சையின் விடயமாக அரச ஊடக நிறுவனங்களின் வகிபங்கு விளங்கியது. 2004 மார்ச்சில் ஊடகங்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் வழிகாட்டல்களை வழங்கினார். பிரச்சாரத்தின் போது, அவற்றிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட சமநிலையினதும், பாரபட்சமின்மையினதும் அரசியலமைப்பு மற்றும் நியதியாக்க தரங்களைப் பொறுத்தளவில் இ.ஒ.கூ. மற்றும் இ.ரூ.கூ. ஆகியனவற்றின் நடத்தை குறைவாகவே விளங்கியது என்பதுடன், பிரச்சாரத்தின் கடைசி வாரத்தில், வழிகாட்டல்களை அமுலாக்குவதற்காக இரு நிறுவனங்கள் தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை தேர்தல்கள் ஆணையாளர் நியமித்தார்.

நியாயமானதும், சமநிலையிலானதுமான அறிக்கையிடலுக்கான தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்கள் 2004 மார்ச் 31 அன்று மீஉயர் நீதிமன்றத்திற்கு அடிப்படை உரிமை விண்ணப்பமொன்றின் வழியினால் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் குறை கூறப்பட்டது. இவ்வாறாக இந்த வழிகாட்டல்களை மீறியதாக காணப்பட்ட சில செய்தி மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்பதற்கு தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை ஆணையாளர் நியமித்தமையும் விளங்கியது. வழிகாட்டல்களை இடைநிறுத்துகின்றதும், தகுதிவாய்ந்த அதிகாரியின் நியமனத்தை நிறுத்துகின்றதுமான வழியாக இடைக்கால நிவாரணத்திற்கான மனுதாராரின் வேண்டுதல் மீஉயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

ஆட்சிபுரிந்த கட்சியான ஐக்கிய பொதுசன சுநத்திர முன்னணியின் உறுப்பின் அங்கமாக அரச ஊடக நிறுவனங்கள் விளங்கியமையினால், சட்டபூர்வ அப்பியாசம் தற்பொழுது நடைமுறையில் இல்லை என்ற உண்மையாக அந்நேரத்தில் இந் நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கவை என கருதப்பட்டதாக பின்னறிவு மட்டும் வலியுறுத்துகின்றது. அதாவது, அனேகமாக கவனக்குறைவாக, தெளிவான நிவாரணத்தைக் கொண்டுவருவதில், அரச ஊடக நிறுவனங்களுக்கும், அவற்றைக் கட்டுப்படுத்தும் அரசியல் கட்சிக்கும் இடையிலான உண்மையான உறவானது இலங்கையின் அரச ஊடக நிறுவனங்களின் முழுமையான ஏற்றுக்கொள்ள முடியாததன்மையை மிகவும் மனதைத் தைக்கும் கல்விசார் அல்லது அரசியல் விமர்சனத்தை விட மிகவும் சக்திவாய்ந்ததாக விவகாரம் எடுத்துக்காட்டியது. பதினேழாவது திருத்தத்தினால் [அத்துடன் 2002இன் 3ஆம் இலக்க தகுதிவாய்ந்த அதிகாரி (அதிகாரங்களும், பணிகளும்) சட்டமாக இணைந்துள்ள இயலச்செய்கின்ற சட்டவாக்கம்] அளிக்கப்பட்ட அதிகாரங்களை ஆணையாளர் நிறைவேற்றுகிறார் என்பதே உண்மையாக விளங்கிய போதும், அது அரசியல் கட்சி அக்கறையின் தொடர்ச்சியாக அரச ஊடக நிறுவனங்களைப் பயன்படுத்துவதற்கான நியாயப்படுத்தும் முயற்சியில் போதியளவு எச்சரிக்கையாக விளங்கவில்லை.

###

2010 ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பாக CMEVஇலிருந்து மேலும் புதுப்பித்தல்கள் தற்போது பின்வரும் எமது இணையதளத்தில் கிட்டும்: http://cmev.wordpress.com on Facebook http://www.facebook.com/electionviolence and instantly via Twitter http://www.twitter.com/cmev

Google maps மீது தேர்தல் வன்முறையை CMEVவெளியிடுகின்றது. எமது தற்போதைய வரைபடத்தை இங்கு பார்க்க: http://cmev.wordpress.com/2010/01/12/presidential-election-january-2010-map-of-election-violence-during-campaign/

தேர்தல் தொடர்பான வன்முறையின் நிகழ்வினைக் கண்காணிப்பதற்காக சுதந்திரமானதும், கட்சி சார்பற்றதுமான தாபனமொன்றாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைக்கு எதிரான கூட்டணி ஆகியவற்றினால் 1997இல் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அமைக்கப்பட்டது. இது தற்போது CPA, FMM மற்றும் INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.